1983 நவம்பர் 18]

6. தகவல் கோரல்.

பாண்டியராஜ்புரம் ஆலை மூடியிருத்தல்

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நேரத்திலே நான் பேசுவதற்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுத்தமைக்காக என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சென்ற மாதம் 24-ஆம் தேதியே பாண்டியராஜபுரம்மில்லைப்பற்றிய ஒரு ஒத்தி வைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன் ஆனால் இது வரையில் எடுக்கபபடாத காரணத்தினால் நான் சொல்கிறேன். வருகின்ற டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி அந்த மில்லைத் திறக்க வேண்டும். அந்த மில்லின் முதலாளிகளும், நிர்வாகஸ்தர்களும் விவசாயிகளைக் கொடுமைப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கு மட்டும் கரும்பைக் கொடுத்து அரைத்ததற்காக கிட்டத்தட்ட 79 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஏற்கனவே கரும்பு கொடுக்கும் விவசாயிகள் வங்கியிலிருந்து மில் நிர்வாகத்தின் மூலம் கடன் வாங்கியிருக்கிறோம். அவர்களின் பணம் முதலாண்டு 7 இலட்சம், இரண்டாம் ஆண்டு 54 இலட்சம் பிடித்தம் செய்து அந்தப் பணத்தைப் பேங்கிற்குக் கட்டாததால், பேங்கிலிருந்து விவசாயிகளுக்கு நோட்டீஸ் வருகிறது. இது வரைக்கும் 59,000 சர்க்கரை மூட்டை ண்டாக் இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்தச் சூழ்நிலையில் டிசம்பர் 1 ஆம் தேதி அந்த மில் திறக்கப்பட வேண்டும். ஒரு நாளைக்கு 1,250 டன் கரும்பு அரைக்கப்பட வேண்டும். அப்படியுள்ள சூழ்நிலையில் கிட்டத் தட்ட 3 கோடி ரூபாய்களை அந்த மில் நிர்வாகஸ்தர்கள் ஏழை எளிய விவசாயிகளிடத்திலே கொள்ளை அடிப்பது மட்டுமல்ல, மில்லை ஓட்ட முடியாமல் ஏற்பாடு செய்து கொண்டிருக் கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே 3 கோடி ரூபாயையும் அரசாங்கமே போட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கும், விவசாயி களுக்கும் இந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த மில்லை அரசாங்கமே எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைக்காகத்தான் இதைக் கொண்டு வந்தேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1983 நவம்பர் 18

(பிற்பகல் 2–20)

அதுமட்டுமல்ல. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு மூன்று மாதமாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை. எனவே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போனஸ் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ப்ராவிடன்ட் பண்ட் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. பாண்டியன் கூட்டுறவுச் சிறப்பங்காடியில் கடன் வாங்கியவர்களுக்கும் இந்தப் பணம் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி பிடிக்கப்பட்ட பணத்தை எல்லாம் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மில் ஓடியாக வேண்டும். அந்த மில்லை அரசாங்கமே எடுப்பதற்குரிய வழிவகை செய்து கொடுத்தால் நல்லது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை தேதி குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 2–21 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

221. பேருந்து மற்றும் பார வண்டிகளின் அடிச் சட்டங்களை விற்கும் எந்த ஒரு வணிகருக்கும் விற்பனை வரியை 15 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 18–7–1983 ஆம் நாளிட்ட 774 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]